செய்ய ஆவன செய்ய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடையநல்லூர் நகரில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் குறைகளைக் கேட்க கிராமங்களுக்குச் செல்லும்போது அரசு வாகனம் ஒதுக்கித்தர வேண்டுமென மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் பல கிராமங்களில் தனி வாக்குச்சாவடி அமைத்துத்தர மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொண்டு, இங்கே நேரம் இல்லாத காரணத்தால், எனக்கு இங்கே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

9. விதி 110-ன்கீழ் அறிக்கை

வட்ட கூட்டுறவு வீட்டு வசதி கடனுக்கான வட்டி, அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 1978-1979 ஆம் ஆண்டு முதல் 1998-1999 ஆம் ஆண்டு வரை வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலம் வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடன் அசல் தொகையினை உறுப்பினர்கள் செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்யலாம் என அரசு முடிவு எடுத்து*

உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம் கடன் நிலுவை அசல் ரூ.292.6 கோடியை உறுப்பினர்கள் செலுத்தும் பட்சத்தில், அவர்கள் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆக மொத்தம் ரூ.110 கோடியை தள்ளுபடி செய்து (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்த பிரிவு மக்களுக்கு உதவிட ஆணையிட்டு உள்ளேன். இதன் மூலம் 5 இலட்சத்து 18 ஆயிரத்து 500 கடனாளிகள் பயன் பெறுவார்கள் என்னும் செய்தியை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

(ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை

(எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

பிற்பகல் 12-35

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பல்வகை, தேர்தல்கள், மாநிலத் தலைமையிடம், மாவட்ட நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற தங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, நான் இரண்டு தினங்களுக்குமுன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு என்னுடைய தொகுதியிலே